R 5385

# நம் உக்கிராணத்துவப் பொறுப்பில் உண்மையாயிருத்தல்

# FAITHFULNESS IN OUR STEWARDSHIP

“உக்கிராணக்காரன் உண்மையுள்ளவனென்று காணப்படுவது அவனுக்கு அவசியமாம்” –1கொரிந் 4:2.

ஒவ்வொரு மிகப்பெரிய தொழில் நிறுவனங்களுக்கு பல்வேறு வகையான வேலையாட்களை பணியில் அமர்த்துவர். அந்நிறுவனம் தங்களுடைய பணியாளர்களின் எல்லா ஒழுக்கப்பண்புகளையும் அங்கீகரிக்கிறது என்பதை இது சுட்டிக்காட்டாது. அவர்கள் சில நல்ல ஒழுக்கப்பண்புகளையுடைய தொழிலாளர்களையும், சில குறைவான ஒழுக்கப் பண்புள்ள தொழிலாளர்களையும் நியமிக்கலாம். இந்த விதத்தில் அவர்கள் தொழிலாளர்களை நடத்துவதில்லை. ஆனால் நல்ல பொறுப்புள்ள பதவிகளை நல்ல குணமுடையவர்கள் என அங்கீகாரம் பெற்றவர்களுக்கே கொடுக்கின்றனர்.

அதுபோல, தேவன் தன்னுடைய ஊழியத்தை செய்வதற்கு வெவ்வேறு பிரதிநிதிகளைப் பயன்படுத்துகிறார். இவை சிலசமயங்களில் உயிருள்ளவைகளாக, சிலசமயம் உயிரற்றவைகளாக இருக்கிறது(ஏசா45:1–4; எரே10:13). ஆனால் அவர் விசேஷமாக தன்னுடைய ஊழியர்களாக அங்கீகரித்தவர்கள் .. விசேஷித்த நிபந்தனைகள் மற்றும் ஒப்பந்தங்கள் மீதான ஒரு விசேஷ வகுப்பாராயிருக்கிற இந்த சுவிசேஷ யுக சபை. இந்த விசேஷித்த ஊழியர்கள் புத்திரர்கள் என்றும் அழைக்கப்படுகின்றனர். அதாவது அவர்கள் தத்தெடுக்கப்பட்டவர்கள், மேலும் அவர்கள் தற்காலத்தில், தேவனுடைய ஊழியத்தில் உண்மையுள்ளவர்களாக இருந்தால், அவர்கள் முழுமையாக தெய்வீகக் குடும்பத்திற்குள் சேர்க்கப்படுவார்கள் என்று வாக்களிக்கப்பட்டு இருக்கிறது.

இந்த ஊழியர்கள் பழங்காலத்தில் நிலவிவந்த ஒரு பொதுவான பெயரான, உக்கிராணத்துவத்தைக் குறிக்கின்றனர். அந்த ஊழியக்காரன் தன் எஜமானுடைய உடைமைகளை, தன் சொந்த உடைமைகளைப்போன்று கண்காணிக்கிறான். அதேசமயம், இந்த சலுகை கொடுக்கப்பட்டிருக்கையில் அவன் தன்னை வேலையில் அமர்த்தியவருக்கு கணக்கு கொடுக்கவேண்டிய கட்டாயமும் அவனுக்கு இருக்கிறது. அவன் எஜமான் அவனிடம், இந்த உடைமைகளைக் கொடுத்து “நீ உன் விருப்பப்படி இவைகளை பயன்படுத்து, நான் எனக்குத் தேவையானபோது அவைகளை கேட்டுப் பெற்றுக்கொள்வேன் என்று கூறவில்லை. அதற்கு மாறாக, அவருடைய உக்கிராணத்துவம்உண்மையுள்ளதாக இருக்கவேண்டும். மேலும் அவன் உண்மையுள்ளவனாக இருக்கிறானா என்று பார்ப்பதற்கு, அதன்பின்னர் உக்கிராணத்துவத்தில் அவனது உண்மைத்தன்மை முடிவில் பரிசோதிக்கப்படும். ஒரு உண்மையுள்ள உக்கிராணக்காரன் தன்னுடைய எஜமானின் விருப்பங்களை வெளிப்படுத்தும் எல்லாவற்றையும் கவனிக்கிறவனாக இருக்கவேண்டும். தன்னுடையவைகளில் கவனமாயிருப்பதைப்போன்று அவைகளில் கவனமாயிருக்கவேண்டும். அவன் தன் தாலந்தை வளர்த்துக்கொள்ள தன்னுடைய எல்லா ஆற்றலையும் உபயோகிக்கவேண்டும். இங்கு அவனுடைய பொறுப்பில் உள்ள பணத்தையே தாலந்து குறிக்கிறது.

**தாலந்துகள் பற்றின உவமை**

தாலந்துகள் பற்றிய உவமையில், கர்த்தரை பிரதிநிதித்துவப்படுத்துகிறவனாகிய ஒரு மனுஷன், தன்னுடைய தாலந்துகளை தன் ஊழியக்காரர்களின் பராமரிப்பில் விட்டுவிட்டு தூரதேசம் செல்வதாக குறிப்பிடப்பட்டுள்ளது. அவர்கள் இந்த உடைமைகள் ஒரு சிறப்பான முறையில் அவர்களிடம் நம்பி ஒப்படைக்கப்பட்டன. இவ்வாறே இது நம்முடனும் இருக்கிறது. நம்மில் ஒவ்வொருவருக்கும் குறிப்பிட்ட தாலந்துகள் ஒப்படைக்கப்பட்டுள்ளது. நம்மை அவருக்கு அர்ப்பணித்து உடன்படிக்கை செய்துகொண்டபொழுது, நமக்குரிய எல்லாவற்றையும் அவருக்கு கொடுத்தபோது, அவர் நம் காணிக்கையை ஏற்றுக்கொண்டு நாம் பெற்றுள்ள இந்த உடைமைகள் மீது அவருடைய உக்கிராணக்காரனாக நம்மை நியமித்தார். இது நம்முடைய நேரம், செல்வாக்கு மற்றும் தொழில், இசை இன்னும் என்ன இருக்கிறதோ – எல்லாவற்றையும் உள்ளடக்கியதாக இருக்கிறது. நாம் அர்ப்பணித்தபிறகு இவை அனைத்தும் நம் ஆண்டவருடையதாகிறது. நாம் இனி கிறிஸ்துவுக்குரியவர்கள். அவரே நமக்குத் தலையாயுமிருக்கிறார். அவரே ஆண்டவராயிருக்கிறார். ஆனால் தன்னுடைய உண்மையுள்ள ஊழியக்காரர்களாக இருந்து, இந்த எல்லா தாலந்துகளையும் அவருக்காக பயன்படுத்த நமக்கு அவர் கொடுத்திருக்கிறார். மேலும், “நான் வருமளவும் என் உடைமையை ஆட்சிசெய்யுங்கள்” என்றும் கூறுகிறார்.

இந்த உவமை, இந்த யுகம் முழுவதும் எல்லா வகையிலும் சபையின் எல்லாருக்கும் பயன்படுத்தப்படுகிறது. ஒவ்வொரு ஊழியக்காரரும் உக்கிராணக்காரன் ஸ்தானத்திலிருந்து அவர் விடுவிக்கும்வரை, அந்த பொறுப்பை வகிப்பதில் விழிப்புள்ளவர்களாக இருக்கவேண்டும். வெறுமனே தன்னை மகிமைப்படுத்திக்கொள்வதற்காக அந்த பொறுப்பை பயன்படுத்துகிற உக்கிராணக்காரன், உண்மையுள்ள உக்கிராணக்காரனாக இருக்கமுடியாது. உண்மையுள்ள உக்கிராணக்காரன் எஜமானின் செல்வத்தையும், மகிமையையும் அதிகரிப்பதற்கே தன் திறமைகளை பயன்படுத்த விரும்புபவனாக இருப்பான்.

நம் ஆண்டவர் இராஜ்ஜியத்தின் பாடங்களைக்கொண்டு பொதுவான மனுக்குலத்துடன் தொடர்புகொள்வதற்கு முன்பாக, தம் இரண்டாம் வருகையில் வந்திருக்கும்போது, உண்மையுள்ள மற்றும் உண்மையற்ற உக்கிராணக்காரர்கள் பற்றிய விளக்கப்படத்தைத் தந்திருக்கிறார். தாம் தாலந்து கொடுத்திருக்கிற இந்த ஊழியக்காரர்களை அவர் எப்படி அழைப்பார் என்பதைக் காண்பித்தார். அவர்கள் தங்கள் தாலந்துகளை பயன்படுத்துவதில் உண்மையுள்ளவர்களாக இருந்தால், அவர்களை அவருடைய இராஜ்ஜியத்தில் அவருடன் ஆட்சி செய்கிறவர்களாக உருவாக்குவதாக அவர்களுக்கு வாக்கு கொடுத்திருக்கிறார். இந்த உவமையில் ஐந்து தாலந்து வாங்கினவர் அதை பத்தாக இரட்டிப்பாக்கியிருந்தார். இரண்டு தாலந்து வாங்கினவர் அதை நான்காக மாற்றியிருந்தார். ஆனால் ஒரு தாலந்து வாங்கினவனோ பயத்தினால் அதை பூமியில் புதைத்து வைத்திருந்ததாக சாக்குப்போக்கு சொல்கிறான். அவனே உண்மையில்லாத ஊழியக்காரனாக அறிவிக்கப்பட்டான்.

இந்த வேலைக்காரன் நித்திய ஆக்கினைக்கு அனுப்பப்படவில்லை, மாறாக அந்த தாலந்து அவனிடமிருந்து எடுக்கப்பட்டது. உக்கிராணக்காரனாக முன்வருவது என்பது அவன் சொந்த விருப்பமாக இருந்தது. உக்கிராணக்காரனாக ஆகியிருக்கவேண்டியவன், அவனுடைய ஆண்டவன் அவனை நம்பி கொடுத்ததை பயன்படுத்தாத காரணத்தால் தண்டனைக்குரியவனாக ஆனதை பார்க்கிறோம். அந்த தாலந்தோ அவனுடைய ஆண்டவருக்குரியது.

ஒரு உண்மையற்ற ஊழியக்காரனிடத்தில் உண்மைத்தன்மை இல்லாததால் தண்டிக்கப்படுவான். நாம் கர்த்தருடைய ஊழியத்தில் நுழைந்து, பிறகு பின்வாங்கி, நம்முடைய வாய்ப்புக்களை புறக்கணிப்பதைவிட, அதில் நாம் நுழையாமல் இருப்பதே சிறந்தது. ஐந்து தாலந்து வாங்கியவன் பின்வாங்கியிருப்பானாகில், அவன் வெறுமனே சும்மாயிருந்ததற்கு பொறுப்பேற்றிருக்க வேண்டும். ஒரு தாலந்து வாங்கினவனிடம் கர்த்தர் நடந்துகொண்ட விதத்தை காண்பிக்கையில், நம் ஆண்டவர் இந்த விஷயத்தை அதிகமாக வலியுறுத்துகிறார். இந்த தாலந்துகள் நம்முடைய பல்வேறுபட்ட திறமைகளை சார்ந்த ஊழியத்திற்கான நம் வாய்ப்புகளைக் குறிப்பிடுகின்றன. குறைந்த திறமையுடைய ஒருவர், அதிக திறமையுடையவரைக்காட்டிலும் குறைவான வாய்ப்பையே பெற்றிருக்கிறார்.

நம்மிடத்திலும் இவ்வாறே இருக்கும். சிலர் பல்வேறு வகைகளில் ஊனமுற்றிருக்கக்கூடும். சிலர் அதிகமான தாலந்துகளையோ அல்லது திறமைகளையோ பெற்றிருப்பர், சிலர் குறைவாகப் பெற்றிருப்பர். நாம் பெற்றிராத தாலந்துகளை நம்மால் உபயோகிக்கமுடியாது. ஒரு மனிதன் தான் பெற்றுள்ளவைகளுக்கு உண்மையுள்ளவனாக கண்டறியப்படுவதே தேவையாயிருக்கிறது. எல்லாத் தாலந்துகளையும் பயன்படுத்துகிற இந்தக் காரியம், முழு இருதய அர்ப்பணிப்பின் உண்மைத்தன்மையின் நிறைவை நம் சிந்தைக்கு வரவழைக்கிறது. ஐந்து தாலந்து உடையவன் மூன்று அல்லது நான்கு தாலந்துகளை மட்டும் உபயோகித்துவிட்டு, நான் மற்றவர்களைக் காட்டிலும் சிறப்பாகச் செய்கிறேன் என்று தவறாக சிந்தித்திருப்பானானால், அதுபோல நாம் செய்யக்கூடாது. மாறாக, தன் தாலந்துகளை முழு திறனுடன் பயன்படுத்துகிற ஒருவர், தேவனை விசேஷமாக பிரியப்படுத்துகிறவராக இருக்கிறார். இரண்டு தாலந்துடையவராயிருந்து அதை உண்மையுடன் பயன்படுத்துகிறவர், ஐந்து தாலந்து பெற்றிருந்து ஐந்தையும் பயன்படுத்திய ஒருவர்பெற்ற அதே பாராட்டுதல்களையே பெறுகிறார்.

**அநீதியுள்ள உக்கிராணக்காரன் பற்றிய உவமை**

இதே பாடத்தை வலியுறுத்துகிற அநீதியுள்ள உக்கிராணக்காரன் பற்றின உவமை **(லூக் 16:1–9)**, யூத யுகத்தில் தெய்வீக ஒழுங்குமுறையின் பிரதிநிதிகளாக, மோசேயின் ஸ்தானத்தில் அமர்ந்திருந்த பரிசேயர்களின் முன்னிலையில், இயேசுவின் சீஷர்களுக்கு முதலாவதாக சொல்லப்பட்டது. ஒரு ஞானமுள்ள உக்கிராணக்காரன் தன் சொந்த எதிர்கால நலன்களுக்கு எச்சரிக்கையாக இருப்பான் என்ற உண்மையை ஆண்டவர் இந்த உவமையில் வலியுறுத்துகிறார். ஒரு கடனாளி நூறு சதவீதம் செலுத்தமுடியாவிட்டாலும், 50 சதவீதம் செலுத்தமுடியுமென்றால், அந்த மனிதனின் எதிர்கால நலனைக் காப்பாற்றுவதற்கு அவன் பாதியளவு செலுத்துவது என்பது அந்த உக்கிராணக்காரனுக்கு தன் சொந்த நலனை கருத்தில் கொண்ட ஞானமான செயலாக இருக்கும். அவன் இதற்குமுன் அவனுடைய ஆண்டவனுக்கு உண்மையில்லாதவனாக, இருந்தபோதிலும், இந்த வழிமுறையை எடுத்ததில் அவனுடைய விவேகம் அவன் ஆண்டவனால் பாராட்டப்பட்டது.

பரிசேயரும் சதுசேயரும் இந்த உவமையில் குறிப்பிடப்படுகின்றனர். நீங்கள் நியாயப்பிரமாணத்தின் தெய்வீக நிபந்தனைகளை நிறைவேற்றமுடியாது என்பது உங்களுக்குத் தெரியும் என்ற நம் கர்த்தரின் வார்த்தைகள் தெரிவிக்கிறது. அதாவது டாலரில் 50 சதவீதம்கூட உங்களால் கொடுக்கமுடியாது என்று கூறுகிறார். மேலும் பிரமாணத்தை கடைப்பிடிக்காத இந்த ஏழை யூதர்கள் சிலரிடத்தில் நீங்கள் அனுதாபம் காட்டவேண்டுமே. நீங்கள் அவர்களிடத்தில் சிலவற்றைக் குறைக்கலாம் , அதாவது, அதை முழுவதும் கடைப்பிடிக்கமுடியவில்லையெனில், அதில் பாதியாகிலும் கடைப்பிடியுங்கள் என்று அவர்களிடத்தில் நீங்கள் கூறவேண்டும். உங்களால் பாதியளவு கடைப்பிடிக்கமுடியுமா ? ஆம். நல்லது, முன்னோக்கிச்சென்று பாதியளவு கடைப்பிடியுங்கள்.

ஆனால் நீங்கள் இவைகள் எல்லாவற்றையும் இழிவாக நினைக்கிறீர்கள்.. அதாவது தெருக்களில், அவர்களைக் கடந்துபோகும்போது உங்கள் வஸ்திரங்கள் அவர்களோடு உரசுவதையும் நீங்கள் விரும்புவதில்லை என்று நம் ஆண்டவர் கூறுகிறார். உங்களாலே நியாயப்பிரமாணத்தை கடைப்பிடிக்க முடியாது என்று

உங்களுக்குத் தெரியும். நீங்கள் என் உவமையின் உக்கிராணக்காரன் நிலைமையில் நினைக்கிறீர்கள். தன் எஜமானிடம் கடன்பட்டவர்களிடத்தில் அந்த உக்கிராணக்காரன் எடுத்த அதே காரியங்களை நீங்கள் எடுக்கவேண்டும். அவன் வெளியேற்றப்படக்கூடிய நிலையில் இருந்தான். அதுபோல உங்களுடைய ஒப்பந்தம் முடிவடையக்கூடிய தருவாயில் நீங்கள் இருக்கிறீர்கள். நீங்கள் பதவியிலிருந்து வெளியேறும்போது ஜனங்கள் உங்களைப்பற்றி பெரிதாக எண்ணமாட்டார்கள். வெளியேறும்போது உங்கள்நிலை உங்களுக்கு சிறந்த உதவிபுரியும். நீங்கள் மோசேயின் ஆசனத்தில் உட்கார்ந்து இருக்கிறீர்கள். அவர்கள் நியாயப்பிரமாணத்தை முழுமையாகக் கடைப்பிடிக்காதபோதும், அவர்கள் அழகான நல்ல ஜனங்களாக இருக்கிறார்கள் என்று உங்கள் சகோதரர்களிடம் சொல்லுங்கள்; மேலும் அவர்கள் இயன்றஅளவு சிறப்பாக செய்ய அவர்களை ஊக்கப்படுத்தவேண்டும். அவர்கள் முன்னேற நீங்கள் உதவவேண்டும்.

பரிசேயர்கள் பற்றிய இந்த உவமையை கொடுத்தபிறகு, இயேசு தம் சீஷர்கள் பக்கம் திரும்பி, ‘‘நான் உங்களுக்குச் சொல்லுகிறேன் அநீதியான உலகப்பொருளால் உங்களுக்கு சிநேகிதரை சம்பாதியுங்கள்’’ என்று சொல்கிறார். அதாவது, இப்போது இதை உங்களுக்கு பொறுத்தி, உங்கள் உலகப் பொருட்களை உலகப்பிரகாரமான உக்கிராணத்துவமாக கருதுங்கள். நீதி அனுமதிக்கும் அளவிற்கு ஜனங்களுடன் இசைவாக வாழுங்கள். அவர்களிடத்தில் முடிவான காரியத்தை எந்த வகையிலும் கட்டாயப்படுத்தி செய்யாதீர்கள். பொருளாதார விஷயத்தில் மட்டுமல்ல, உங்கள் நிகழ்வுகள் எல்லாவற்றிலும் பெருந்தன்மை உடையோராயிருங்கள். எல்லாரையும் கண்டித்து நித்திய வேதனையினால் அவர்களை அச்சுறுவதற்கு பதிலாக, தேவன் மிகவும் இரக்கமுள்ளவர் என்றும், மனுக்குலம் முழுவதுக்குமான மீட்பரை கொடுத்திருக்கிறார் என்றும் அவர்களுக்கு சொல்லுங்கள். தேவன் கிறிஸ்துவின் மூலமாக மிகுந்த இரக்கமுள்ளவராயிருக்கிறார் என்ற உறுதியில், நல்ல திடமனதுடன் இருங்கள் என்றும், உங்களில்முடிந்த அளவு சிறந்ததை செய்யுங்கள் என்றும் அவர்களுக்குச் சொல்லுங்கள். மேலும் அவர்களுடைய சோதனையின் காலம் வரும்போது, அவருடைய கரங்களில் சிறப்பாக நடத்தப்பட இருக்கிறார்கள் என்பதையும் சொல்லுங்கள் என்று சொல்வதாக இது இருக்கிறது.

இவ்வாறு ஜனங்களுக்கு கற்பித்தபிறகு, நாம் ஒருவேளை பரிசேயர் சதுசேயர் வகுப்பார் அடைந்திருந்த தீய சித்தத்தை அடையக்கூடும். ஆனால் நாம் தேவனுக்கும் நீதிக்கும் இசைவாக இருக்கிறவர்கள். மற்றும் ஜனங்களின் நல்ல சித்தத்தைப் பெற்றுக்கொண்டிருக்கிறோம். நாம் பெயர்க்கிறிஸ்தவ அமைப்புக்களின் உயர்மட்ட விழாக்களிலிருந்து விலக்கப்பட்டிருந்தாலும், அநேக பொதுவான ஜனங்கள் சந்தோஷத்துடனும், அனுதாபத்துடனும் கேட்கிறவர்களாயிருந்து, தங்கள் வீடுகளை நம்மோடு பகிர்ந்துகொள்ள விரும்புகிறவர்களாக இருக்கிறர்கள். அப்படியாக, எங்கெல்லாம் தேவனுடைய ஜனங்கள் இருக்கிறார்களோ அங்கெல்லாம் உலகமுழுவதிலும் வீடுகளை நாம் பெற்றிருக்கிறோம். அவர்கள் தேவனுடைய ஏற்பாடுகளைப் பாராட்டுவதற்கான கண்களையும்காதுகளையும் உடையவர்களாயிருக்கிறார்கள். அதற்கும் மேலாக கர்த்தர்தாமே, இறுதியாக நம்மை நித்திய வாசஸ்தலங்களுக்கு ஏற்றுக்கொள்வார். இந்தவகையில் நாம் ஞானமுள்ள உக்கிராணக்காரனாக இருக்கிறோம். நன்மை செய்வதற்கும், நன்மை செய்வதற்கு மற்றவர்களை அறிவுறுத்துவதற்கும், நம்முடைய சிறந்த திறமைக்குத்தக்கதாக நம் நேரத்தையும் பெலத்தையும் பயன்படுத்தி ஜீவிக்கிறோம்.

**இரண்டு உவமைகளின் ஒப்பீடு**

தாலந்து மற்றும் இராத்தல் உவமைகள் ஒத்தவைகளாயுள்ளன. இரண்டும் ஒரு மாபெரும் வீட்டெஜமான் அல்லது ஆண்டவன் தன் ஊழியக்காரர்களுடன் தொடர்புகொண்டு விசாரிப்பதைப் பற்றி குறிப்பிடுகின்றன. இராத்தல் உவமையில் குறிப்பிட்ட அந்த பிரபு, தூர தேசத்திற்குச் சென்று தன் இராஜ்யத்தைப் பெற்று திரும்பி வருகிறார். இந்த உவமை ஏரோதுஇராஜா போன்ற ஒரு கீழ்நிலை இராஜா ஆட்சிசெய்யும்போது, ரோம சிங்காசனத்திற்கு புதிய பேரரசர் வரவிருப்பதைக் கேள்விப்பட்டு, ஏரோது இராஜா தன் சொந்த இராஜ்ஜியத்திற்கு தன்னை மறு நியமனம் செய்வதைக்குறித்து கவலையுடன் இருப்பார் என்ற உண்மையை அடிப்படையாகக் கொண்டிருந்தது, பேரரசர் தன்னை மீண்டும் பதவியில் அமர்த்த வல்லமையுண்டு என்பதை அறிந்தவராய், தன்னுடைய இராஜ்யத்தை மறுபடியும் பெறுவேனா அல்லது இந்த இடத்தை வேறுயாராவது பெறுவார்களோ என்று அறிந்துகொள்வதற்கு விருப்பமுடையவராக இருந்தார். ஆகவே அப்படிப்பட்ட கீழ்நிலை இராஜா ரோமிற்கு சென்று, தன்னுடைய இராஜ்ஜியத்தைப் பெற்று திரும்பி வந்ததன் அல்லது புதிய பேரரசரிடமிருந்து ஒரு பொறுப்பை பெற்று வந்ததன் கண்ணோட்டத்துடன் இது இருந்தது.

இந்த உருவகப்படத்தில் நம் ஆண்டவர் தன்னை சிங்காசனத்தினைப்பெற அழைக்கப்பட்டிருந்த பிரபுவைக் குறிப்பிடுகின்றார். பரலோகமாகிய தூர தேசத்திற்கு தன் இராஜ்ஜியத்திற்கான பதவியை பெறுவதற்கு சென்றார். அவர் முதலில் அதிகாரத்துடன் பதவியில் அமர்த்தப்படவேண்டும். பின்னர் திரும்பவந்து தன் இராஜ்ஜியத்தை ஸ்தாபிக்கவேண்டும். ஏற்றவேளையில் அவர் மாபெரும் மேசியாவாக ஆகவேண்டும்.

தாலந்து உவமையில் ஆண்டவர் தூரதேசத்திற்கு செல்லுமுன், தன் ஊழியக்காரை அழைத்து, தன் உடைமைகளையும், சொத்தையும் அவர்களிடம் ஒப்படைக்கிறார். இந்த ஊழியக்காரர்களை உக்கிராணக்காரர்களாக வைக்கிறேன் என்று அவர்

சொல்கிறார். அவர் அவர்களின் பல்வேறு திறமைக்கு ஏற்ப ஒருவனுக்கு ஒரு தாலந்து, வேறொருவனுக்கு இரண்டு தாலந்துகள், மற்றொருவனுக்கு ஐந்து தாலந்துகளை தந்தார். அவர்கள் அனைவரும் நினைவில் வைக்கப்பட்டனர். அவர் திரும்பவந்தபோது தன் ஊழியக்காரர்களை அழைத்து அவர்களிடம் கணக்குப் பார்த்தான். இரண்டு தாலந்து வாங்கினவன் வந்து,ஆண்டவரே நீர் எனக்கு இரண்டு தாலந்துகள் கொடுத்தீர், இதோ என் அறிக்கையைத் தருகிறேன், நான் வேறு இரண்டு தாலந்துகளை சம்பாதித்தேன் என்றான். ஐந்து தாலந்துகள் வாங்கினவன், ஆண்டவரே நீர் எனக்கு 5 தாலந்துகள் கொடுத்தீர், இதோ நான் வேறு 5 தாலந்துகள் சம்பாதித்தேன். நான் அந்த எண்ணிக்கை இரட்டிப்பாக்கி 10 பெற்றுள்ளேன் என்றான். ஆண்டவர் அவர்கள் ஒவ்வொருவருக்கும், “ நல்லது, உத்தமமும் உண்மையுமுள்ள ஊழியக்காரனே, கொஞ்சத்தில் உண்மையாயிருந்தாய், அநேகத்தின்மேல் உன்னை அதிகாரியாக வைப்பேன், உன் எஜமானுடைய சந்தோஷத்திற்குள் பிரவேசி” என்று சொன்னார்.

பிறகு, ஒரு தாலந்தை உடையவன் வந்தான். அவன் அதை திரும்ப செலுத்தினாலும், அதை பயன்படுத்தத் தவறியிருந்தான். அவன்; நான் பணத்தை இழக்கவில்லை, இதோ உம்முடையது என்று கூறினான். எஜமான் அவனுக்குப் பிரதியுத்தரமாக, சோம்பலும் பொல்லாதவனுமாகிய ஊழியக்காரனே! என்றான். அவன் உண்மையில்லாதிருந்தபடியால் தண்டிக்கப்பட்டான்.

**வாய்ப்பு பொறுப்புணர்வை அளவிடுகிறது**

நாம் தற்போது அடைகின்ற அனுபவங்களின் விளக்கமாக இவ்வுவமையை நம்ஆண்டவர் தந்தார். இந்த தாலந்துகள் வாய்ப்புக்களை உள்ளடக்கியதாக இருக்கிறது. இதை விளக்குவதற்காக: சமீபத்தில் 5000 பேரடங்கிய ஜனங்களுக்கு சத்தியம் பேசுவதற்கான வாய்ப்பை அல்லது தாலந்தை நாம் பெற்றோம். ஆகையால் நாம் அதற்கான பொறுப்பையும் பெற்றிருந்தோம். நாம் அந்த வாய்ப்பைப் பெறவில்லையெனில் அதன் பொறுப்பையும் பெற்றிருக்கமாட்டோம். இதையே கர்த்தர் குறித்துக்காட்டுகிறார் என்று நாம் புரிந்துகொள்கிறோம். மற்றவர்களைவிட அதிக வாய்ப்புக்கள் வழங்கப்பட்டவராக ஒருவர் இருக்கலாம். ஒருவர் ஒரு நல்ல எழுத்தாளராக இருக்கக்கூடும், மற்றொருவர் நல்ல பேச்சாளராக இருக்கலாம், வேறொருவர் ஒரு நல்ல அறிவுரை வழங்குபவராக இருக்கலாம். மற்றும் ஒருவர் இந்த மூன்று விஷயங்களுக்கும் உகந்தவராக இருக்கலாம். இந்த மூன்றிலும் சிறந்தவராக இருக்கும் ஒருவர், ஒரு திறமை உடையவர் பெற்றிருக்கும் பொறுப்பைவிட, மூன்று மடங்கு அதிக பொறுப்பை பெற்றவராகிறார்.

வேதாகமக் காலத்தில் தாலந்து என்பது ஒரு குறிப்பிட்ட அளவு பணத்தைக் குறிப்பிடுகிறது. மிகவும் சமீபத்திய புள்ளிவிவரங்களின்படி(அமெரிக்க வேதாகம சங்கம்1895), வேதத்தில் குறிப்பிடப்பட்டுள்ள தாலந்து– பொன்னாகவோ அல்லது வெள்ளியாகவோ இருக்கிறது. தங்க தாலந்தின் அமெரிக்க பணத்தின் மதிப்பு 32689டாலர்; அதே வெள்ளி தாலந்தின் மதிப்பு 1563.37 டாலர். நம் கர்த்தர் தாலந்தை பயன்படுத்தியிருந்தாலும், அது பொன்னையோ அல்லது வெள்ளியையோ குறிப்பிடாமல், தேவனுடைய சித்தத்தை செய்வதற்கும், சகோதரர்களுக்கு ஊழியம்செய்வதற்குமான அவருடைய ஜனங்கள் பெற்றுள்ள வாய்ப்புக்களை சிறப்பாய் பொருள்படுத்துகிறது. இந்த சிறியரில் யார் ஒருவருக்கும் நன்மை செய்கிறவன் ஆசீர்வாதத்தை பெறுவான் என்று அவர் கூறுகிறார்.

இராத்தல் பற்றின உவமையில் கற்றுத்தரப்படும் பாடம் ஓரளவு வித்தியாசமாயுள்ளது. இதில் அந்த எஜமான் தன் ஊழியக்காரர் ஒவ்வொருவருக்கும் ஒரு ராத்தலைக் கொடுத்து, அவனவனுக்குக் கொடுக்கப்பட்டதைக் கொண்டு ஒருவன் 5இராத்தல் சம்பாதித்தான், மற்றொருவன் 10 இராத்தல் சம்பாதித்தான். மூன்றாமவன் ஒன்றும் சம்பாதிக்கவில்லை. இந்த இராத்தல்(மினா அல்லது மெனெ) பொன்னாயிருந்தால் 6537.8 டாலருக்கும், வெள்ளியாயிருந்தால் 312.67டாலருக்கும் சமமாயிருக்கிறது.

**ஒவ்வாருவருக்குமான ஒரு இராத்தலின் முக்கியத்துவம்**

இந்த உவமையின் பயன்பாட்டில், நம்முடைய புரிதலுக்காக இராத்தல் என்பது தேவபிள்ளைகள் ஒவ்வொருவருக்கும் கொடுக்கப்பட்ட நீதிமானாக்கப்படுதலின் ஆசீர்வாதத்தைக் குறிக்கிறது. எப்போது அவர் அந்த இராத்தலைத் தந்தார்? அவர் எப்போது நம்மை அவரது ஊழியக்காரராக ஏற்றுக்கொண்டாரோ அப்போது தருகிறார். எப்போது அவர் நம்மை ஊழியக்காரராக ஏற்றுக்கொண்டார்? முதலில் நாம் பாவத்திலிருந்து திரும்பியபோது ஊழியக்காரராக இருந்ததில்லை. பாவத்திலிருந்து திரும்புவது என்பது ஊழியக்காரராக ஆவதல்ல. தேவனை நோக்கிய முதல் அடி என்பது பாவத்திலிருந்து திரும்பி நீதியை நோக்கியதாக இருக்கிறது, மேலும் தேவனுக்கு அருகில் இழுத்துக்கொள்வதற்கான முயற்சியாகவும் இருக்கிறது; “என்னிடத்தில் சேருங்கள், நான் உங்களிடத்தில் சேருவேன்” என்று தேவன் சொல்கிறார்.

இது ஒருவர் நீதிமானாக்கப்படுதலின் வழியில் நடப்பதைக் குறிக்கிறது. மாறாக அதைப் பெற்றுக் கொண்டதையல்ல. அவர் தன்னுடைய கருத்துக்களில் நீதிமான் நிலையை அடையும் சரியான இடத்திற்கருகே சென்றுகொண்டிருக்கிறார். இறுதியாக, ஆண்டவரே நீங்கள் என்னை ஏற்றுக்கொண்டால், நான் பெற்றுள்ள எல்லாவற்றையும் உமக்குத் தருவேன் என்று சொல்கின்ற இடத்திற்கு அவர் வருகிறார். அவர் தேவனது ஊழியனாக ஆவதற்கு தன்னை கையளிக்கிறார்.

ஒருவர் பாவத்திலிருந்து திரும்பும்போது, கர்த்தரது ஊழியனாக இன்னும் ஆகவில்லை, தவறுசெய்வதற்கு நாம் ஒருபோதும் உரிமை பெற்றிருக்கவில்லை.மேலும் பாவம்

மற்றும் தவற்றிலிருந்து வெளியேறுவதினால் நாம் தேவனுக்கு ஊழியம் செய்வதில்லை. இந்த யுகத்தில் பரிசுத்தஆவியினால் ஜெநிப்பிக்கப்பட்டவரைத் தவிர வேறு எவரையும் தேவன் ஊழியக்காரராகப் பெற்றிருக்கவில்லை. சில வகைகளில் மற்றவர்களும் அவருடைய ஊழியர்களாக பயன்படுத்தப்பட்டிருக்கலாம். தேவன் மனிதனது கோபத்தைக்கூட தனக்கு ஊழியம் செய்ய பயன்படுத்த முடியும். ஒரு குறிப்பிட்டவிதத்தில் சாத்தானும்கூட அவரது ஊழியனாக இருக்கக்கூடும். சிலசமயங்களில் கர்த்தர் என்ன செய்ய விரும்புகிறாரோ அதை அவன் செய்கிறான். சாத்தான் யூதர்களைத் தூண்டிவிட்டு, இயேசுவை சிலுவையில் அறைந்தபோது, அவன் தேவனுக்கு ஊழியம்செய்தான் என்று நாம் நினைக்கிறோம். பிசாசுகளும்கூட தேவஜனங்கள்மீது உபத்திரவங்களைக் கொண்டுவருவதில் பலமுறை கர்த்தருக்கு ஊழியம் செய்கின்றன. இந்த உபத்திரவங்கள் ஆபரணங்களை மெருகேற்றுகிற இயந்திரக்கல்லை சுற்றுவதைப் போலிருக்கின்றன. தேவன் அவரது ஆபரண வகுப்பாரை மெருகேற்றுவதற்கு தற்காலத்தில் சில வகைகளில் பயன்படுத்த விரும்புகிறார்.

ஆனால், இந்த உவமையில் குறிப்பிடப்பட்டுள்ள ஊழியக்காரர்கள் தேவனுடைய அர்ப்பணிக்கப்பட்ட ஜனங்களாக இருக்கின்றனர். யார் தேவனுக்குத் தன்னை முழுமையாக அர்ப்பணிப்பதன் நிலைப்புள்ளியை அடைகிறாரோ, அவரே தேவனது ஊழியக்காரர் என்று அழைக்கப்படுவார். பாவத்திற்கும் அநீதிக்கும் ஊழியம் செய்தவர்கள், தங்கள் வாழ்க்கையை கர்த்தருக்குக் கொடுக்காதவரை தங்கள் சொந்த ஊழியக்காரர்களாக சுயத்திற்கு ஊழியம் செய்கிறவர்களாக இருக்கிறார்கள். பின்னர் இவர்கள் என் சித்தம் எதுவுமில்லை உம் சித்தமே, மரணபரியந்தம் நான் உமக்கு உண்மையுள்ளவனாக ஊழியம்செய்வேன் என்று கூறுவர். அப்போது கர்த்தர் இவர்களை தம் ஊழியர்களாக ஏற்றுக்கொண்டு, ஒவ்வொருவருக்கும் ஒரு இராத்தல் தருகிறார்.

இந்த இராத்தல் என்பது என்ன? அது ஜீவனுக்கான நீதிமானாக்கப்படுதலாக .. விலையேறப்பெற்றதாக இருக்கிறது. இப்போது, விசுவாசத்தினால் நீதிமானாக்கப்பட்டு, இவ்வாறு தேவனுடைய ஊழியக்காரராக ஏற்றுக்கொள்ளப்பட்டு, பரிசுத்தஆவியினால் ஜெநிப்பிக்கப்பட்ட ஒவ்வொருவரும் கர்த்தருடைய ஊழியக்காரர்களாக தங்களால் இயன்றதை செய்யும் வாய்ப்பைப் பெற்றுள்ளனர். கர்த்தர் என்ன தாலந்தைக் கொடுத்திருக்கிறாரோ அதை அவன் பயன்படுத்துகிறான். அவன் இராஜாதி இராஜாவின், கர்த்தாதி கர்த்தாவின் உண்மையுள்ள உக்கிராணக்காரனாக, தன் பராமரிப்பில் ஒப்படைக்கப்பட்டுள்ள எல்லாவற்றையும் தன்னால் இயன்றவரை சிறப்பாக செய்யவேண்டும்.

————————————————